# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



RERA

157

உறுப்பினர் செயலர்/துணை இயக்குநர்(பொ),
ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.ந.ரா.தியாகராஜன், பி.டெக்.,

ந.க.எண். : 96/2021 ஈமா-3 நாள் : 28.12.2021

பொருள் : திட்ட அனுமதி - குடியிருப்பு மனைப்பிரிவு - ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமப்பகுதி - ஈரோடு மாவட்டம் - ஈரோடு மாநகராட்சி - ஈரோடு கிராமம் - ரி.ச.எண்கள்.1002/6,7,8,9,15,16,17,18,19,20-இல் 1.7537ஏக்கர் (7096.90 ச.மீ) நிலப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்குதல்- தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் திரு.P.முருகானந்தம், திரு.S.பிரகாஷ் மற்றும் திரு.J.சுப்பிரமணியன் ஆகியோரது விண்ணப்பம் நாள்.07.01.2021 இணையதள விண்ணப்பம் எண்.2020020010210136 நாள்.23.12.2020
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)/ மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.96/2021/ஈமா3, நாள். 17.03.2021 மற்றும் 13.08.2021
3. மனுதாரர் திரு.P.முருகானந்தம், திரு.S.பிரகாஷ் மற்றும் திரு.J.சுப்பிரமணியம் ஆகியோரது கடிதம் நாள்.27.10.2021. (சாலை பகுதிகள் மற்றும் பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.6140/2021 நாள்.12.10.2021 மற்றும் மின்பகிர்மானத்திற்கான இடம் TANGEDCO-பரப்பு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.6141/2021 நாள்.12.10.2021 )
4. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (MA-1) துறை நாள் : 04.02.2019 மற்றும் அரசாணை (நிலை) எண்.16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (MA-1) துறை நாள் : 31.01.2020.
5. அரசாணை (நிலை) எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் நவ4(3) துறை நாள் : 09.12.2020.
6. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைகடிதம் ந.க.எண்.19799/2020-போ நாள்.24.12.2020
7. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் நவ4(3) துறை நாள் : 04.06.2004.

8. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் நவ4(3) துறை நாள் : 23.09.2020.
9. அரசு கடிதம் எண்.19113/ந.வ.4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் நவ4(3) துறை நாள் : 30.08.2017.
10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017 LA1 நாள் : 08.09.2017.
11. இவ்வலுவலகக் கேட்பு கடிதம் எண். நாள் : 26.11.2021
12. மனுதாரர் கட்டணங்கள் செலுத்தப்பட்ட நாள் : 14.12.2021

---------

உத்திரவு:

01. பார்வை 1-ல் சுட்டிய மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 3-ல் காணும் மனுதாரர் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் ஆகியன உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண்.6140/2021 நாள்.12.10.2021 மற்றும் மின் பகிர்மானத்திற்கான இடம் TANGEDCO-பரப்பு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண்.6141/2021 நாள்.12.10.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

02. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ஈமா(ஈஉதிகு) எண்.41/2021 என எண்ணிடப்பட்டும் 3 அசல் வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

03. ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு, திட்ட அனுமதி எண். 40/2021 என்ற எண்ணில் திட்ட அனுமதியும் வழங்கப்படுகிறது.

04. மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.18(ஈ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

05. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத்துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

06. செயலாணை கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## சிறப்பு நிபந்தனைகள்

1. (a) பார்வை 5-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 4-ல் கண்ட Tamil Nadu Combined Development Building Rules 2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" After Collecting the necessary fees the final layout sketch, permit of the Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of Planning authority along with the permit of local body to the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 9 மற்றும் 10-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. The Tamil Nadu Government in G.O. Ms. No: 112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, Market, book, sell or offer for

sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி, திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி, திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகைப்பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப்பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

இணைப்பு :

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
   ம.வ./ஈமா(ஈஉதிகு) எண்.41/2021 மற்றும்
   மனைப்பிரிவு நிபந்தனைகள் - 3 தொகுப்பு
2. தானப்பத்திரம் ஆவணம் எண்.6140/2021, 6141/2021-ன் அசல்

30/12/21

உறுப்பினர் செயலர்/துணை இயக்குநர்(பொ)
ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம்,
ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு.

30/12/2021 30/12/21

பெறுநர்
ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு மாவட்டம்.

நகல் : மனுதாரர் (உள்ளாட்சி வழியாக)
திரு.P.முருகானந்தம் திரு.S.பிரகாஷ் மற்றும் திரு.J.சுப்பிரமணியன்
6/2,வரதராஜன் வீதி,
காந்தி நகர்,
ஈரோடு.

நகல் (தகவலுக்காக)

The Chairman,
Tamil Nadu Real Estate Regulatory Authority,
No 1 A, CMDA Tower II, 1st Floor,
Gandhi Irwin Bridge Road, Egmore, Chennai - 600008.

ஈரோடு மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பாளர்: க.சிவகுமார் ., எம்.ஏ.,



ந.க.எண். இ1/167/2022 நாள். 30.05.2022.

| | |
|---|---|
| பொருள்:- | மனைப்பிரிவு- ஈரோடு மாநகராட்சி - மண்டலம் - 4 ஈரோடு கிராமம் ரீ.ச.எண்கள்.1002/6,7,8,9,15,16,17,18,19,20-இல் 1.7537 ஏக்கர் (7096.90 ச.மீ) நிலப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உள்ளூர் திட்டக்குழுமத்தால் திட்ட அனுமதி வழங்கியுள்ளது-ஈரோடு மாநகராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடல் - சார்பாக. |
| பார்வை:- | 1. உறுப்பினர் செயலர் / துணை இயக்குநர் (பொ) ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஈரோடு அவர்களின் கடித ந.க.எண்.96/2021 ஈமா-3 நாள்.28.12.2021.<br>2. ஈரோடு சார்பதிவாளர் அவர்களின் தான சாசன பத்திரபதிவு ஆவண எண்.6140 / 2021 நாள்.12.10.2021. |

***********

பார்வை 1-ல் காணும் உள்ளூர் திட்டக்குழுமம் ஈரோடு அவர்களின் செயல்முறை உத்திரவில் ஈரோடு கிராமம் ரீ.ச.எண்கள்.1002/6,7,8,9,15,16,17,18,19,20-இல் 1.7537 ஏக்கர் (7096.90 ச.மீ) நிலப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ/ ஈமா (உதிகு) எண்.41/2021 என்ற எண்ணிடப்பட்டும், மனை ஒப்புதல் வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண்.40/2021 என்ற எண்ணில் திட்ட அனுமதியும் வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

வீட்டுமனைப்பிரிவில் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் மற்றும் சாலைகளுக்கான ஒதுக்கீடுகள் இடங்களை தானபத்திரம் மூலம் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து, மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் கீழ்காணும் உள்ளூர்திட்டகுழுமத்தால் வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. உறுப்பினர் செயலர் (பொ) ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் நடவடிக்கையின்படி மனைப்பிரிவு நிபந்தனைகளில் உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் ஒப்புதல் இன்றி எவ்விதமாற்றமும் செய்யப்படகூடாது.
2. ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை ஆணையாளர் ஈரோடு மாநகராட்சி என்ற பெயருக்கு மாற்றி வருவாய் துறையின் சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதன் விவரங்களை உடனடியாக வழங்கவேண்டும்.
3. வருவாய் துறையின் சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதன் விவரங்களை வழங்க காலதாமதம் ஏற்படின் மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் ரத்து செய்ய ஆணையருக்கு முழு அதிகாரம் உள்ளது.
4. உறுப்பினர் செயலர் (பொ) ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் திட்ட அனுமதி வரைபடத்தின் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.
5. ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் உறுப்பினர் செயலரின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
6. அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / உரிமையாளர் முறையாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தை செலுத்தி ஈரோடு மாநகராட்சிக்கு உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக

பராமரிக்க தற்கால மற்றும் வருங்கால ஈரோடு மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (தானப்பத்திரம் எண்.6140/2021 நாள்.12.10.2021)

7 (1). ஒரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

2. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.

3. விரிவு அபிவிருத்தித் திட்டப்பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிப்பட்டட மனையில் ஒரு பக்க இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

4.அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்படுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 9 மீட்டர் அகல சாலைக்கு 1.50 மீட்டர் மற்றும் 10 மீட்டர் சாலைக்கு 3.0 மீ என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியினை தெருவின் உயர்மட்டத்திலிருந்து 1.8 மீ (6 அடி) கட்டட விதிகளின்படி 2.4 மீட்டர் (8 அடி) உயரத்திகு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர எந்தவித கட்டடமோ, சுவரோ கட்டுதல் கூடாது.

5. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீ அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறந்தவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத் திறந்தவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.

6. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் மாநகராட்சி பகுதிக்கு குறைந்தது 2 மீ அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும்.

7. விரிவு அபிவிருத்தித் திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், திட்டவிதிகளின்படி மனையின் பரப்பில் 50 விழுக்காட்டிற்கு மேல் கட்டடம் கட்டப்படக் கூடாது. கட்டடம் கட்டாமல் விடப்படும் திறந்தவெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.
8. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
9.கடைக்கல் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தவோ கூடாது.

9. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத்தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

10. மனைப் பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் மாநகராட்டிசியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

11. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளதுபோல் உட்பிரிவு செய்யப்படவேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

12. மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் பூங்கா ஆகிய நிலங்களை மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தாலோ அல்லது விற்பனை செய்தாலோ அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயரழுத்த மின்கம்பி பாதை / தந்தி கம்பி பாதை அமைந்தால் கம்பி பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்.

205

14. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக உள்ளாட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகள் தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுதான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப்பத்திரங்களின் பகுதியாகச்சேர்க்கப்பட வேண்டும்.

15 (அ) தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்பு சட்ட அதிகாரிக்கு தெரிவித்தல் வேண்டும்.

16. மனுதாரர் உள்ளாட்சியிடம் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண், நாள் மன்றத்திற்கும் மனுதாருக்கும் ஒப்பந்தமான நாள், எண் ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

17. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின்படி நிலஉரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நிலஉரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

18. நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறிவிக்கப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

19. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

20. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம், விடுதலின்ற மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

21. நகர் ஊரமைப்புத்துறை ஈரோடு உள்ளூர்திட்டக்குழுமம் ஈரோடு அவர்களின் மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்:</u>

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு = 1.7537 ஏக்கர் (அ) 7096.90 சமீ

ஒதுக்கியமனைகள் = 32

<u>பொது ஒதுக்கீடு</u>

(மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது)

மனைப்பிரிவு சாலையின் பரப்பு = 2505.07 ச.மீ

பொது உபயோகம் = 28.00 ச.மீ (0. 61%)

Tangedco – விற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது = 24.00 ச.மீ (0.52%)

இணைப்பு : வரைபட நகல்

30/5/22

ஆணையாளர்

ஈரோடு மாநகராட்சி

30.5.22

பெறுநர்: திரு.பி.முருகானந்தம் திரு.எஸ்.பிரகாஷ் மற்றும் ஜே.சுப்ரமணியன் ,
6/2 வரதராஜன் வீதி காந்தி நகர் ஈரோடு.

நகல்: 1. உதவிஇயக்குநர் / உள்ளூர் செயலர் (பொ) ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் ஈரோடு
2. ஈரோடு சார்பதிவாளர் - தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காக



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate